செய்தி வெளியீடு எண்:125 நாள்:21.05.2021

<u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் 19.05.2021 அன்று கொரோனா பெருந்தொற்று நோய் இரண்டாம் அலை பரவலை தடுக்கும் வகையில் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், அரசுடன் ஒருங்கிணைந்து செயல்படும் வகையில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தான கூட்டம் சென்னை தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பேசிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், கொரோனா பெருந்தொற்றின் வேகமானது, கடந்த முதல் அலையை விட இந்த இரண்டாவது அலையில் மிக கடுமையாகவும், பெரும் சவாலாகவும் உள்ளது என்றும், இப்பெருநோயினை அரசின் செயல்பாடுகள் மட்டுமே முற்றிலும் ஒழித்துவிட முடியாது என்றும் , கொரோனா பெருந்தொற்றிலிருந்து மக்களைக் காக்கும் பணியில், தமிழ்நாடு அரசு எடுத்து வரும் அனைத்து முயற்சிகளுக்கும், நடவடிக்கைகளுக்கும் ஆக்கமும் ஊக்கமும் அளிக்கும் வகையில் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் களத்தில் நின்று ஒன்றிணைந்து செயல்பட வேண்டுமென்றும் அனைத்து தன்னார்வ தொண்டு நிறுவனங்களையும் கேட்டுக் கொண்டார்.

மேலும், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மூலம் அரசு மருத்துவமனைகளுக்கு பிராணவாயு, உயிர் காக்கும் மருந்துகள் வழங்குவது, கொரோனா தொற்று நோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு இலவச வாகன வசதிகள் செய்வது, இந்நோய் தீவிரம் குறித்தும், தடுப்பூசி போடப்படுவதன் முக்கியத்துவம் குறித்தும், பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துவது போன்ற சேவைகளில் தன்னலம் கருதா பெரும் சேவைகளில் ஈடுபட்டு வரும் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் அரசுடன் கைகோர்த்து நன்கு ஒன்றிணைந்து மக்களின் சேவைகளை முன்னுரிமைப்படுத்தி இணைந்து செயல்பட்டால், இந்த நெருக்கடி காலத்தை எளிதில் வெற்றி கொண்டு மக்களை காக்கலாம் என்றும், எனவே, இந்தப் பணிகளை ஒருங்கிணைத்து மக்களுக்கு உதவிட மாநில அளவிலான ஒருங்கிணைப்புக் குழு (State Level Co-ordination Committee) அமைக்கப்படும் என்றும் தெரிவித்திருந்தார்கள். தற்போது, கொரோனா பெருந்தொற்று நோயை ஒழிக்க தன்னார்வ தொண்டு நிறுவனங்களுடன் ஒன்றிணைந்து செயல்பட, மாநில அளவிலான ஒருங்கிணைப்புக் குழுவிற்கு கீழ்க்கண்ட அதிகாரிகளை நியமித்து உத்தரவிட்டுள்ளார்கள்.

| வ.எண் | அரசுஅதிகாரிபெயர் / மாநிலஅளவிலானஒருங்கிணைப்புக் குழுவின் உறுப்பினர் |
|---|---|
| 1. | திருமதி. G. லக்ஷ்மிபிரியா, இ.ஆ.ப.,<br>கூடுதல் ஆணையர் (நிர்வாகம்), வணிகவரித் துறை, சென்னை–5. |
| 2. | திரு. S.P.அம்ரித், இ.ஆ.ப.,<br>அரசு துணைச் செயலாளர்,<br>பொது (சட்டம் (ம) ஒழுங்கு)த் துறை, சென்னை–9. |
| 3. | திரு. S.சாந்தகுமார்,<br>மாவட்ட வருவாய் அலுவலர், தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம்,<br>சென்னை–32. |
| 4. | திரு. M.கண்ணன்,<br>மாவட்ட வருவாய் அலுவலர் / பொதுமேலாளர்,<br>தமிழ்நாடு மின்னணு நிறுவனம் (ELCOT), சென்னை. |

இக்குழு தன்னலம் கருதா தன்னார்வ தொண்டு நிறுவனங்களுடன் ஒன்றிணைந்து இந்த கொரோனா பெருந்தொற்று நோயை ஒழிக்க மேற்கொள்ளும் பணிகளுடன் சேர்த்து, பெருந்தொழில் நிறுவனங்களிடமிருந்து சமூக பங்களிப்பு நிதியினைப் பெற்று **(Corporate Social Responsibility** – CSR) அதன் மூலம் கொரோனா தொற்றிலிருந்து மக்களைக் காக்க மேற்கொள்ளப்படும் பல்வேறு நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கும் பணிகளையும் மேற்கொள்ளும்.

மாநில அளவிலான இந்த ஒருங்கிணைப்புக் குழு தன்னார்வ தொண்டு நிறுவனங்களுடன் ஒன்றிணைந்து சென்னை, தேனாம்பேட்டையில் அமைந்துள்ள தேசிய சுகாதார இயக்க வளாகத்தில் இயங்கி வரும் கட்டளை மையத்தில் (War Room – Unified Command Centre) தனது பணிகளை மேற்கொள்ளும். தனியார் தொண்டு நிறுவனங்கள் tnngocoordination@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரி மூலம் மாநில ஒருங்கிணைப்புக் குழுவினை தொடர்பு கொள்ளலாம்.

**********

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**